பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

13 02 2026 FRIDAY 7 15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பயணத்தில், பிரதமர் அலுவலகத்திற்கான புதிய வளாகம், முக்கிய மைல் கல்லாகும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. கோதுமை கையிருப்பை அடிப்படையாக கொண்டு, 25 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

3. மக்களின் நம்பிக்கையை பெற்ற ஊடகமாக வானொலி திகழ்கிறது என்று சத்திஷ்கர் முதலமைச்சர் திரு. **Vishnu Deo Sai** கூறியுள்ளார்.

4. யுக்ரைன் உடனான அடுத்த கட்ட அமைதிப் பேச்சுக்கள் அடுத்த வாரம் நடைபெறும் என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

5. ஆசிய துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியின் இறுதிநாளான இன்று இந்தியா 7 பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பயணத்தில், பிரதமர் அலுவலகத்திற்கான புதிய வளாகம், முக்கிய மைல் கல்லாகும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று இந்த வளாகத்தில் உரையாற்றிய அவர், நாட்டின் நலனுக்காக மக்களை அடிப்படையாக கொண்ட நிர்வாகத்தில் தமது அரசு உறுதியுடன் இருப்பதை இது எடுத்துரைப்பதாக தெரிவித்தார்.

மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் இந்த வளாகம் உருவாக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நாடு சுதந்திரம் அடைந்த இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும், 50க்கு மேற்பட்ட இடங்களில் மத்திய அமைச்சகங்கள் இயங்கி வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இவற்றின் வாடகைக்காக ஆண்டுதோறும் ஆயிரத்து 500 கோடி ரூபாய்க்கும் கூடுதலான தொகை செலவிடப்படுவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

தினசரி 10ஆயிரம் ஊழியர்கள் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு செல்ல பயணம் மேற்கொண்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது கட்டப்பட்டுள்ள இந்த புதிய வளாகத்தின் மூலம் செலவுகள் குறைவதோடு நேரம் சேமிக்கப்படும் என்றும் இதன் காரணமாக உற்பத்தித் திறன் மேம்படும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பிரதமர் அலுவலகத்திற்கான புதிய வளாகம் இன்று புதுதில்லியில் திறக்கப்பட்டிருப்பது வரலாற்று சிறப்புமிக்கது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், சேவையையை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பணியாற்றி வருவதாக கூறியுள்ளார்.

இதன் அடிப்படையிலேயே இந்த வளாகத்திற்கு சேவைக்கான புனிததலம் என்று பெயரிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் இதுவும் ஒரு மைல் கல்லாகும் என்று திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

நாட்டின் நலனில் சமரசம் செய்து கொள்ளாமல், பிற நாடுகளுடனான வர்த்தக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தின் பட்டமளிப்பு விழாவில கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

அரிசி உற்பத்தியில், சீனாவை பின்னுக்குத் தள்ளி இந்தியா முதலிடத்தை பிடித்துள்ளதாக அவர் கூறினார்.

நமது கோதுமை ரகங்கள் சர்வதேச அளவில் வரவேற்பை பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி அயராது பணியாற்றி வருவதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.

>>>>>><<<<<<

பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களுக்கு வர்த்தக வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதில் *APEDA* நிறுவனம் முக்கியப் பங்கு வகிப்பதாக தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த அமைப்பின் நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊரகப் பகுதிகளில் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் *APEDA* பணியாற்றுவதாக திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

இளையோருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குவதில் மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார். திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கான சர்வதேச மையத்தை ஏற்படுத்துவது தொடர்பாக, ராஜஸ்தான் அரசு அதிகாரிகளுடன் இன்று அவர் ஆலோசனை மேற்கொண்டு பேசினார்.

தொழில்துறையினருடன் இணைந்து, திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

கோதுமை கையிருப்பு மற்றும் விலை நிலவரத்தை அடிப்படையாக கொண்டு, 25 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கோதுமை பொருட்களை 5 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு ஏற்றுமதி செய்யவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

சுகாதாரத் துறையில் தொழில்நுட்பத் துறையின் பயன்பாடு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

சுகாதார சேவைகளை வழங்குவதில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமும் பயன்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தில் இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நோய் கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளிலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் முதலாவது அமர்வு இன்று நிறைவடைந்தது.

இதையடுத்து இரு அவைகளும் அடுத்த மாதம் 9ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

>>>>>><<<<<<

மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தியின் செயல்பாடுகள் கண்டிக்கத்தக்கது என்று பிஜேபியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. ரவிசங்கர் பிரசாத் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசியல் ரீதியாகவும், ஜனநாயக ரீதியாகவும் திரு. ராகுல் காந்தியின் செயல்பாடுகள் முறையானதல்ல என்று குறிப்பிட்டார்.

எந்தவொரு ஜனநாயக நடவடிக்கை மீதும் நம்பிக்கை இல்லாவண்ணம் திரு. ராகுல் காந்தி செயல்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

அவையின் கண்ணியத்தை குலைக்கும் வகையில் திரு. ராகுல் காந்தி செயல்பட்டதாகவும் திரு. ரவிசங்கர் பிரசாரத் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மக்களிடம் தகவல்களை கொண்டு செல்வதில் வானொலி வலிமையான ஊடகமாக திகழ்கிறது என்று சத்திஷ்கர் முதலமைச்சர் திரு. **Vishnu Deo Sai** கூறியுள்ளார்.

*உலக வானொலி தினத்தை முன்னிட்டு இன்று ராய்ப்பூரில் நடைபெற்ற தேசிய அளவிலான நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.*

*வேளாண் குறித்த தகவல்களை வழங்குவதிலும், சக்திவாய்ந்த ஊடகமாக வானொலி செயல்படுகிறது என்றும் அவர் கூறினார்.*

*செய்திகளை முந்தி தருவதில் வானொலி சிறப்பாக செயல்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.*

*மக்களின் நம்பிக்கையை பெற்ற ஊடகமாக வானொலி உள்ளது என்றும் திரு.* ***Vishnu Deo Sai*** *கூறினார்.*

*இந்நிகழ்ச்சியில் பேசிய ஆகாஷ்வாணியின் தலைமை இயக்குநர் திரு. ராஜீவ் ஜெயின், சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் வானொலி முக்கியப் பங்கு வகிப்பதாக தெரிவித்தார்.*

*கலாச்சாரத்தை பாதுகாப்பதிலும், சமூக பொருளாதார வளர்ச்சியிலும் வானொலியின் பங்கு இன்றியமையாதது என்றும் அவர் கூறினார்.*

*வானொலியின் சேவைகள் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் சென்றடையவதாகவும் திரு. ராஜீவ் ஜெயின் தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*உத்தரபிரதேசத்தில் தடயவியல் துறை வலுப்படுத்தப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.*

*சட்டப்பேரவையில் இதுதொடர்பாக அறிக்கை தாக்கல் செய்து அவர் உரையாற்றினார்.*

*மாநிலம் முழுவதும் 12 தடயவியல் ஆய்வகங்கள் செயல்பட்டு வருவதாகவும் திரு. யோகி ஆதித்யநாத் தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*மேற்குவங்கத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்த ஆவணங்கள் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு பராமரிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

இப்பணிகள் தொடர்பாக காணொலி வாயிலாக இன்று ஆய்வு மேற்கொண்டு பேசிய தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar, இப்பணிகள் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

ஆவணங்களின் பரிசீலனையின் போது, அதிகாரிகள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்றும் திரு. Gyanesh Kumar வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம், வாசனை பொருட்களின் ஏற்றுமதிக்கு உத்வேகம் அளிக்கும் என்று தொழில் துறையினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த தொழிலதிபர் திரு. Nimish Vora இந்த வர்த்தக ஒப்பந்தத்திற்கான அறிவிப்பு வெளியான பின்னர், வாசனை பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

யுக்ரைன் உடனான அடுத்த கட்ட அமைதிப் பேச்சுக்கள் அடுத்த வாரம் நடைபெறும் என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

இருப்பினும், இந்தப் பேச்சுக்கள் எந்த நாட்டில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படவில்லை.

>>>>>><<<<<<

நேபாளத்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று அந்நாட்டு பிரதமர் திருமதி. Sushila Karki கூறியுள்ளார்.

காத்மண்டுவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த தேர்தலை வெற்றிகரமாக நடத்த அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

ஆசிய துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியின் இறுதிநாளில் இந்தியா இன்று 7 பதக்கங்களை வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 25 மீட்டர் பிரிவில் Amanpreet Singh தங்கப்பதக்கத்தையும், Gurpreet Singh வெள்ளிப்பதக்கத்தையும், Ankur Goel வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் குழுப் பிரிவில் இந்தியாவிற்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

மகளிர் 50 மீட்டர் பிரிவில் Sift Kaur Samra வெள்ளிப்பத்கம் வென்றார்.

இப்போட்டியின் சீனியர் பிரிவில் இந்தியா 13 தங்கம், 11 வெள்ளி, 9 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<<<

சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Snehit Suravajjula காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர் 9-11, 15-17, 11-4, 11-6, 18-16 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Mizuki Oikawa-வை வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் சத்யன் ஞானசேகரன் - ஹர்மித் தேசாய் இணையும், Ankur Bhattacharjee - Payas jain இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவில், Payas jain - Syndrela Das மற்றும் ஹர்மித் தேசாய் - Yashaswini Ghorpade இணைகளும், அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

மகளிர் இரட்டையர் பிரிவில் Lakshita Narang – Hardee Patel இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>**end**<<<<<<<